உ

சிவமயம்.

பதிகம்

கல்விநகர்க் கடவுட் பா

முத்துவிநாயகர் பதிகம்
சோம சுந்தரர் பதிகம்
சௌந்தரநாயகி பதிகம்
குன்னல்மாகாளி பதிகம்
அரங்க நாயகர் பதிகம்

ஜி. வி & சன்ஸ்,
காரைக்குடி.

[illegible]

[illegible]

உ

சிவமயம்

கல்விநகர்க்

கடவுட்பா

இஃது

கல்லல் என்று வழங்கும்

கல்விநகர்

திரு. சு. கி. கருப்பன் செட்டியார்

அவர்களால்

இயற்றி,

ஆசிரியர்

கோ. வைத்தியலிங்கப் பிள்ளை

அவர்களால்

திருத்தியும் கூட்டியும் புதுக்கியும் பரிசோதித்தது

பாஸ்கரன் அச்சுக்கூடம்

காரைக்குடி.

1927.

சிறப்புப்பாயிரம்

ஆசிரியர் கோ. வைத்தியலிங்கப் பிள்ளையவர்கள்

எழுதியது.

பொன்னும் புகழும் மன்னிய வுணர்வுந்
தன்னியல் பாற்சமை தரச்சிறந் தோன், மற்
றுயிர்கட் கருள்கூ ருயர்திரு வாளன்,
இசையா வொருபொரு ளுண்டென வேன்று
நசைகெடப் பொய்க்கு நடலைதீர் வள்ளல்,
பிறரறி யாதே தானிடு மீகை
முறைபெறச் செய்யும் மூதறி வாளன்,
தெய்வ பத்தியு மெய்தவ விழைவும்
பொய்தீர் நல்லறத் துள்ளமும் பொலிவும்
அறந்தலைத் தந்த வரும்பொரு டாங்கலும்
பிறன்பொருள் கொள்ளாப் பேரறத் திறனும்
மறநெறி போகா மனமு முடையோன்.
நல்லியல் புடைய கல்ல லூரன்,
வாணிகத் தொல்குடி வண்கை மரபன்.
பேணுஞ் சிவநெறி பிறழா வுரவோன்,
இவ்வெலாந் திகழ்தர விறைவர்ப் போற்றுதல்
செவ்விதென் றுளங்கொளீஇச் சிந்தையி னடிக்

கருவிளை யாவகைக் கந்தபுராணமுந்
திருவிளை யாடலுஞ் சிலபிற வும்பயில்
கதைகளை யெடுத்துக் காட்டிமற் றவைதாம்
பொதிதரு முத்து விநாயகர், சோம
சுந்தரர், சௌந்தர நாயகி, குன்னல்மா
காளி, யரங்கநாத ரிவர்மேல்
வாழிநற் பதிகமொவ் வொன்றே தனிப்பல
பாக்களு மியற்றி யவையெலாந் திரட்டிக்
கடவுட் பாவெனப் பெயர்புனைந் தறிவோ
ருடன்படத் தந்தன னன்பி னொருவா
அன்பு மதனு லழியா வீடும்
மன்பதை பெறுவான் வானீர் சுரக்கு
முருணிக் கரைதிக ழோங்குயர் மாளிகை
சீரணி கொளவாழ் சந்தனத் தென்னம்
பொருப்ப னனைய நற்சுகி
கருப்பன் செட்டியார் கவின்பெற மன்னே.

சிவமயம்.

கல்விநகர்க் கடவுட்பா

தனிப் பாக்கள்

படிக்காசு விநாயகர்

செந்நெல்மலி கல்விநகர் தன்னின் மேவித்
தெய்வமால் யானைமுகச் செல்வனாகித்
துன்னுமருட் சோமசுந் தரற்கு மற்றச்
சுந்தரநா யகிக்குமுனந் தோன்றிநின்று
மன்னுபெருச் சாளியின்மேல் வாகா யேறி
மகிழுமன்பர் தமையுவந்து வாழுநல்கிப்
பன்னரிய வுலகமெலாம் பரிந்து காக்கும்
படிக்காசு விநாயகன்றாள் பணிந்து வாழ்வாம்.

சுப்பிரமணியர்

திருமலி யைம்படை வீடு சேறல்போல்
பருவத முடிதொறும் பயின்று மங்கையர்
இருவர் தம்முடன் னிலகி யெம்மனோர்க்
கருடரு மறுமுகன் அடிமலர் சூடுவாம்.

தக்கிணாமூர்த்தி

ஆக்கமிகு கல்லாலின் கீழிருந்து நால்வருக்கன்
றறமு ணர்த்தித்
தேக்கின்ப வாரிதியின் மூழ்குவித்துத் திருவாத
வூரர்க் கன்பாற்
போக்குவர வில்லாத மெய்ப்பொருளைக் குருந்தடி [யிற்
புணர்த்திக் காட்டும்.
வாக்குமனக் கெட்டாத தக்கிணா மூர்த்திதாள்
மனத்துள் வைப்பாம்.

நடராசர்

திருவடக் கானத் திரத்தினச் சபையுமிளிர்,
தில்லையிற் கனக சபையும்
செல்வமிகு மதுரையின் வெள்ளியம் பலமுமுயர்
சிறந்ததிரு நெல்வே லியின்
மருவுதாம் பிரசபையு மன்னுகுற் றாலத்து
வளர்சித்ர சபையு மாக
மன்னுயிர்கள் வாழவும் ஐந்தொழிற் குறியாக
வைப்புமுறை யிற்சி றந்தே
கரியநெடு மால்முழவு கொள்ளவும் நான்முகன்
கனதாள மிடவு மாங்கே
கானமிகு முனிவர்தும் புருநார தம்முனிவர்
கண்களா ரக்களிக் கவும்

வுருவளர்வி யாக்கிரம பாதர்பன் னகமுனிவ
    ருள்ஆநனி கண்டுவக் கவும்
வுபரணவ ரதநடன மாடுநட ராசனை
    யுண்மையொடு மன்பு புரிவாம்.

வைரவர்

அரன்றனை மதித்திடா வயன்மு கத்தொரு
சிரந்தனைக் கிள்ளியும் தேவர் மற்றவர்
உரந்தரு மகந்தையை யுதறி யும்பெரு
வரந்தரு வடுகனை வாழ்த்தி வணங்குவாம்.

நந்திதேவர்

நந்தலிற் றருமஞான நவையிலா வடிவமெய்தி
மூந்தியெம் பரசிவத்தை முதுகினின் மகிழ்ந்து
[தாங்கிச்
சிந்தையின் மாறுவன்பிற் சேணெடுங் கொடியு
[மாகும்
நந்தியெம் பெருமான் பாதம் நாளுநாம் நண்ணி
[வாழ்வாம்.

இலக்குமி

பொங்கு பாற்கடல் முண்டகப் போதினும்
மங்க லந்தரு மாதவன் மார்பினும்
தங்கி வையந் தழைதிரு மாமகள்
பங்க யப்பதம் பாடிப் பணிகுவாம்.

சண்டேச்சுரர்

வேதியர்கள் விடுத்தபெரும் பசுநிரையை விளைநிலத்தில்
மேய்ப்பார் போலத்
தீதகன்று பெருமணலைச் சிவலிங்க மாக்குவித்துச்
சென்னி மீதில்
மூதறிவிற் பால்சொரிந்து மனமுருகி நிற்கவதை
முனிந்து வீழ்த்தும்
தாதையைத்தா ளெறிந்தசண்டேச் சுரவடிகளிணை மலர்தாள்
தலையிற் கொள்வாம்

அனுமார்

சங்கதிருங் கடறாவிச் சீதாதேவி
தயக்கொழியக் கணையாழி தனைக்கொடுத்து
மங்குமசோ கவனத்தை யழித்தரக்கன்
வன்மையெலாங் கண்டவன்றான் வாலி விட்ட

பொங்கெரியா லிலங்கைநகர் முழுதுஞ் சுட்டுப்
பொருவில்சூ டாமணியைப் புனிதற் கீந்து
துங்கமுறத் துயரமறத் தோன்றி நின்ற
தூயவனு மானடியைத் துதித்து வாழ்வாம்.

நம்மாழ்வார்

வேதந் தமிழ்செய்த மூர்த்திவந் தாரென்று
வெளிமு ழங்க
வாதம் புரியா வருஞ்சங்க மாந்தர்தம்
வாய்ம தத்தைப்
போதந் தருதிரு வாய்மொழி யாலறப்
போக்கி விட்ட
நாதன் றிருக்குருகூர்நம்பி நம்மை
நயப்பிக் குமே.

பொது

மங்கலந்தரு சிவனுமை கணபதி மயிலோன்
செங்கண் மாறிருத் தொண்டர்தம் தேவியர் மற்
[றும்
பொங்கு வானவ ரிவர்தமைப் புவியெலாம்போற்ற
வெங்கு நான்மறைச் சைவமு மோங்குக வினிதே.

குன்னல்மாகாளி

பாலிலை நெய்போல வண்டங்க ளெங்கும்
பரந்து நின்றும்
பாலிலை யெய்துதயிர் வெண்ணெய்போ லூர்தோ
[றும்
பாவ நின்றும்
சேலிலே யமைந்த விழிச் செல்விபெரு
தேவியெனச் சிலம்பிரண்டு
காலிலே பூண்டருள்செய் குன்னல்மா காளியெமைக்
கவின்செய் வாளே.

௨

முத்திவிநாயகர் பதிகம்

---(:)---

பரசிவஞ் சத்தியொடு நந்தவன மதனிலே
　　பளிங்குமண் டபமதனிலே
பார்த்து வருபோதிலே பரதேவி யோங்கார
　　பண்புகுஞ் சரம்பிடி யதா
யுருவுடன் புணர்தலென் னென்றுசிவ சாமிபா
　　லுசாவவும் நாற்கோட் டுடன்
ஓங்குபுகர் முகமும் பருத்ததிரு வடிகளும்
　　உல்லாசமாய் விளங்கித்
தாமான தாய்தந்தை தாள்களிற் பணியவவர்
　　தந்தமுற் பட்டத் திறைற்
றலைவராய் மூவர்க்கு முதல்வ ராய்ச் சற்சமய
　　தத்துவ மெலாங்க டந்த
சிரமே யுனக்குநிகர் நீயலது வேறிலை
　　தினமுனைத் துதிக்க வருள்வாய்
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
　　திகழ்விநா யகக்க டவுளே　　(க)

ஏர்மேவு குஞ்சர முகத்தழகு மெழில்மேவு
　　மேகவெண் கோட்டி னழகும்
இருகாது மூன்றுவிழி சீதளவி லாசமும்
　　இலங்குதிரு நீற்றி னழகும்

பார்மேவு நவமணி பதித்தொளிரு மகுடமும்
பாங்கான பேழை வயிறும்
பஞ்சகர தலமுமங் குசபாச வன்மையும்
பார்க்கின்ற கருணை நோக்கும்
நார்மேவு நாண்மலர்ப் பாதமும் மேதமில்
நறுமணங் கமழ்நா சியும்
நண்ணு திரு மார்பினி லெண்ணுமுப் புரிநூலும்
நயந்தெம்மை யிரட்சிக் கவே
சீர்மேவு திருமேனி தாங்கிவரு செல்வமே
சிவற்கினிய மூத்த பிள்ளாய்
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே. (உ)

பிரமாதி தேவரும் யாவரும் காணரிய
பெருகொளி மலர்த்தாள் களும்
பேசரிய நாதவுரு வானகிண் கிணியழகும்
பேணுநற் சிலம்பி னழகும்
பரமான திருமுடிப் பொலிவுமுயர் பார்வையும்
பான்மதியும் வேணி யழகும்
பத்திசெயு முத்தமர்கள் சித்திபெற வைத்திட்ட
பான்மைமிகு வபய கரமும்
தரமான பிரணவா காரமும் மும்மதச்
சலதிகவிழ் குஞ்சர முமாய்
தரணிதனி லூர்தொறுந் தெருவீதி சந்திதொறும்
சமைந்தருள்செய் சாமி நீயே

திரமாக வெனதுள்ள மேவியருள் செய்தெனைச்
சிந்தைவைத் தினிதா ளுவாய்
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே. (௩)

புத்திநா தத்துடன் போதஞா னப்பொருள்
பொருந்துநான் மறையு மாகிப்
பொலிவுதரு சச்சிதா நந்தமாய் விந்தைசேர்
புகழ்கயிலை நாத னுகிச்
சத்திசிவ மாகியே பத்திசெய் யன்பர்கள்
'சார்பசக வேயி ருந்து
சாலோக சாமீப சாரூப சாயுச்ய
சன்மார்க்க பதவி தந்து
எத்திசையும் விளையாடு மண்ணலே சித்திபெறு
மியல்பினோர்க் குதவு நிதியே
ஈசனே யிருபெண்க ணேசனே யேகனே
யிமையவர்க ளேத்து மெந்தாய்
தித்திக்கு மமிர்தமே திருமாலின் மருகனே
சிறியெனேற் கருள்செய் யையா
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே. (௪)

கயமுகா சுரன்பரம சிவபிரா னைத்தவம்
கண்டுகரை யில்லா வரம்
கைக்கொண்டு தேவர்முதல் யாரையும் மதியாது
காதினிற் கைபி டித்துத்

தயவுபெற வவரவர் தலைகளில் மூன்றுமுறை
தாந்தமைக் குட்டு வித்துத்
தயங்கவரு துன்பமே செய்துவரு வதுகண்டு
சற்சனர்க ளாய தேவர்
நயமேவு தெய்வநின் சந்நிதியை நாடநீ
நற்பூத சலனி லேறி
நலமிலவ் வசுரனைப் போர்தடிந் தன்னவன்
நற்பெருச் சாளி யாகச்
செயமேவு மூர்த்தியாய்க் கொண்டுயிர்க் கருள்மேவு
சிவகுமர வெனையா ளுவாய்
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே. (௫)

வேதத்தி னுண்பொருளை யன்னைபார் வதிக்கரன்
விளம்பவவ ளெண்ண மின்றி
வேறுபட் டிருந்ததை யுணர்ந்தரன் வெகுண்டுநீ
வீசுவலை மகளா கென
மீதெழு சினத்தோடு நீயுநின் னிளவலும்
வேதச்சு வடியை வேலை
வீழ்த்திடவு மெமதண்ண லிளையவனை மூகையாய்
மேவவே சபித்து நின்னைப்
பேதமிலை நாமுமற் றவனுமென் றெண்ணியே
பேசா திருந்து விட்டார்
பேசிலோ வேழமுக வண்ணலே நினதருமை
பெருமையை யாவ ரறிவார்

தீதெலா நினை முன் வணங்கவே தீர்த்துநற்
சித்தியருள் தெய்வ நீயே
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே. (சு)

இந்திரன் முந்தியொரு பகலிந்த மண்ணுலகி
லேர்பெறுஞ் சீர்கா ழியில்
எந்தையை யருச்சிக்க நந்தவன முண்டுசெய்
தியல்பணி நடாத்தி வரவே
கந்தமிகு மலர்கள்மழை யின்றிநீ ரின்றிமுகை
காணு தயர்ந்து மகவான்
காசினியி னினையன்றி வேறுதுணை யில்லையென்று
கண்டுகுறை நேர்ந்திரக்க
விந்தமடக்குமொரு குறுமுனிவ னுகமுயர்
விரிசடைக் கமண்ட லத்தை
விரிசிறைக் காகவுரு வாகிநீ யருளினல்
வீழ்த்திநந் தனம்வி ளங்கச்
சிந்தைமகிழ் வாசவன் செய்தவம் நல்கவருள்
தெய்வநா யகதெய் வமே
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே. (எ)

அகாரமும் உகாரமும் மகாரமும் மானவோங்
காரவடி வான பரனை
ஐயனை நினைவேறு கருதாது சிந்திக்கும்
அடியவர்க் குணறு தந்தை

நகரிலே நற்பதம் நண்ணுமது சாட்சியாய்
நற்றமிழ்ப் புலமை யௌவை
நாளுநற் பூசனை யியற்றிவர வாளுடைய
நம்பியுஞ் சேர மானும்
புகர்முகத் தைராவ ணம்புரவி யாகமேற்
புண்ணியக் கயிலை புகுவான்
புறப்படுதல் கண்டுதா னவரொடும் போகவே
பூசையை விரைந்து செய்யச்
சிகரமுயர் கைலாய வரையிற் றுதிக்கையாற்
சேர்த்தவனை யாண்ட வெந்தாய்
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே. (௮)

வேதநெறி தழையவும் மிகுசைவ மாகுநன்
மெய்த்துறை விளங்க வுந்தான்
வித்தகச் செல்வர்சம் பந்தர்முதல் மூவரும்
வேண்டியே செய்து போந்த
சீதமிகு பண்கள்மலி செந்தமி ழடங்கன்முறை
தேவார வைப்பை நாடிச்
சிந்தைநொந் தயருமன பாயனுள மகிழவே
திகழுஞ் சனத்தி னாலே
பூதமலி மண்ணுட் புதைத்தபொரு ளொப்பவே
புற்றினுண் மூடப் படும்
பொற்புடைய தமிழ்வேத நிதியையுல குய்யவும்
புகழ்மன்ன னுளமகி ழவும்

நிதகல வும்மனம் வைத்தெதரித் தருளுமொரு
தெய்வமே யெனையா ளுவாய்
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே (௯)

மண்ணுமாய் விண்ணுமாய் மற்றுமுள பூதமாய்
மன்னுயிர்கள் பலவு மாகி
மதியாகி ரவியாகி வானுமற் கோள்களாய்
வளருமவை யாவு முய்ய
எண்ணுநீ யவைதொறும் முள்ளும் புறம்புமாய்
இயைந்துநிற் கின்ற வதனால்
என்னுடைய வினையெலாம் போக்கியருள் செய்
லெளிதாகு முண்மை யன்பால் [திடல்
பண்ணினால் நின்பதம் பாடவறி யேனெனும்
பரிவினாற் பாடு மிந்தப்
பதிகமதை யுவகையொடு பாடுவோர் பாடியுரை
பகருவோர் யாரு முய்யத்
திண்ணமாய் நன்மகவு பொன்பூமி திருவெலாஞ்
சேரவே வாழ வருள்வாய்
செல்வமிகு கல்விநகர் செட்டிகுள முத்திமுதல்
திகழ்விநா யகக்க டவுளே (௰)

சோமசுந்தரர் பதிகம்

———(:)———

மாமேவு மலரயன் மகன்றக்க னப்பனை
வணங்கியெல் லோர்க்கு மேலாம்
வழிபடுந் தேவன்யா ரெனவினவ மன்றுடைய
மாதேவ னேயென் னவும்
தேமேவு மாதவஞ் செய்துபய னுகவே
சிவசத்தி தன்னை மகளாத்
தெரியவத் திருமகள் தானுமோர் மாதவஞ்
செய்தனள் ளுன்னை வேண்டிப்
பூமேவு மத்தவ மிரங்கியவள் சாலையுட்
புகுந்துநீ வேண்டு மவைதான்
புகலென்ன வும்மைநான் மணம்புரிவ தென்னவே
புந்திவைத் தவளை யாங்கே
தூமேவு கைதொட் டழைத்துகை லாயமெழு
துய்யனை யெனைபா ளுவாய்
துங்கமிகு கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே. (க)

தக்கன்மக டாக்கா யிணிப்பெண்ணை யவனுளச்
சம்மதந் தேளா மனீ
தனிக்கொண்டு சென்றமை யுணர்ந்தவன் வெகுண்
[டுதான்
தவவேள்வி யொன்று செய்து

திக்கற்ற தேவரில் லோரையுஞ் சமைதந்து
சிவனென்று மதியா மலே
சீரிலா வலியபன் முதறமக் கிந்திடச்
சினத்திலுண் டாய வீர
மிக்கவ னெழுந்துபோய் வேள்வியை யழித்துமேல்
மேவுசிறு தேவரை யெலாம்
விழ்த்தினது போதாமல் தக்கமா பதகனை
வெறித்தலைய றுக்கி மீளச்
சொக்கமென நின்றுதம் மிகழ்வாரை நன்மதிச்
சுடர்கொளுவு மையன ருள்வாய்
துங்கமுபர் கல்விநக ரங்கயற் கண்ணியபர்
சோமசுந் தரக்க டவுளே. (உ)

தந்தைசெய் வேள்வியிற் கணவரை யிகழ்ந்ததால்
தரியாத வுடலை மாற்றிச்
சமைகுவே னென்றுதாக் காயிணிப் பேரம்மை
சைலமால் வரையி னருகில்
விந்தைமிகு மடுவிலா விந்தமேற் சங்கினுரு
மேவியே யிருக்க வெற்பின்
வேந்தன்மே னையுடன் கண்டுபரி வுடனேந்தி
மேனிமிக வேவ ளர்க்கச்
சிந்தைமகி ழன்னைசிவ காமியாய் நினைமருவு
செய்தவ மியற்ற நேர்ந்து
செவ்விய வுருக்கொண்டு சென்றவள் களிக்கவே
திருமணஞ் செய்து மீண்டு

சொந்தமனை பாக்கியார் வதியெனச் சத்திகொள்
துய்யனை யெனைபா ளுவாய்
துங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே (௩)

அணுவாகி யணுவெலாஞ் சேர்ந்துபல பொருளாகி
யவையைந்து பூதங் களாய்
அப்பெரும் பூதங்கள் சேர்ந்துபல வண்டமா
யவற்றினுயிர் பலவு மேவுந்
தநுவாகி தெய்வநினை வுண்டாகி மாறுபடு
சமயச் சழக்கு முன்று
சைவமா முயர்தைவ நெறியுவந் தன்பர்தஞ்
சகசமல வீக்க நீக்கி
உணவுதரு பேரின்ப முத்தியை யளித்தற்கு
வுபதேச குருவு மாகி
உண்மையன் புணரவரு முயர்ஞான போதநெறி
யுண்டுசெய் தாண்டு மன்னுந்
துணிவுபடு முழுமுதற் பொருளாகி நின்றனை
துரிசுதீர் நலமரு ளுவாய்
துங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே (௪)

பிணியோடு மூப்புதிரை சாக்காடு நரையெலாம்
போந்தின்ப மருவு மன்பாற்
பேசுபுகழ் தேவர்கள் ளீசனை வேண்டவே
பெரிதுவந் தவர்ப் புரப்பான்

திணிவுபடு பாற்கடலி னுப்பண்டை மேருவைக்
        தெரிந்துமத் தாக நாட்டிச்
செயிருறுவா சுகியைநா ணாகவே பூட்டிப்
        தேவரொடு மசுர ரீர்க்கப்
பணியிலெழு மாலால விடநஞ்சை யுலகுயப்
        பரிவினு னேந்தி மாந்தப்
பணிமொழி பதைத்துசெங் கையாற் பரிந்துடன்
        பற்றிக் கழுத்தி னளவாய்த்
துணிவுபெற மகிழ்நிலை கண்டரா யமரரைத்
        தொல்லமிர்த மருளு மெங்கள்
துங்கழுபர் கல்விநக ரங்கபற் கண்ணியமர்
        சோமசுந் தரக்க டவுளே (௩)

அந்தரந் தன்னிலே மூன்று லோகத்தினு
        லாருமுக் கோட்டை கட்டி
அனைதம்மொ டேகியே யமரர்முத லியாவரையு
        மடாதுயர் செய்து திரிவார்
நிந்தனைய வசுரர்செய் நீடியர்க் காற்றாது
        நெறியினற் குறையி ரந்து
நிற்கவே திருவுள மிரங்கியப் பகைமையை
        நீக்கவச் சிறுதே வர்கொள்
சிந்தையிறு மாப்பையற வேபோக்க வுஞ்சிறிது
        சிரித்துமுப் புரமெ ரித்துத்
தொந்தமுறு முழுமுதற் றன்மையையுணர்த்தியருள்
        தூயனே யீனமா னவாய்

தீயவவ் வசுரரைக் காய்ந்து நற்றேவரைத்
திகழவே வைத்து மேலாந்
துங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே (௬)

ஆசைபடு காமத்தி னதிகார மதியோக
வறிஞர் பாலணுகா மலே
யழியுமென் றுலகுயிர்க ளுணரவே தாமுமோ
ரடயோகி யாகி நின்று
மாசையகல் யோகத் தமர்ந்ததை யுணர்ந்தமரர்
மன்மதனை யேவி நிற்க
மதியிழந் துருவுகொள் ளவனின்னை மதியாமன்
மலர்க் கணைகள் மாறெய்திடத்
தேசமிகு மனையனுடல் சிந்தவே நெற்றியிற்
றீக்கண் டிறந்து மன்றிச்
சிரித்துப் புரத்தினை யெரித்தவா சித்தசன்
றீர்ந்தொழிய மனைவி வேண்டத்
தாசைபக லுருவோ டவர்க்குநல் லுயிர்தந்த
தாயனை யெனையா ளுவாய்
துங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே (௭)

ஞாலமிகு முயிர்வாழ்வு நடலைமிகு நமனுடைய
நாட்டுக் கணக்க தென்று
நவிலுமொழி சிவனடிய வர்க்கில்லை யென்றுதாம்
நாட்டியதை பார்க்க டவ்வூர்ச்

சீலமிகு பதினாறு வயதுடைய மார்க்கண்ட
        சேயைச் சினந்து வந்து
சிவபூசை யவர்செயும் வண்மையைத் தேறாது
        சிறுபாச மதனை வீசும்
காலனைக் கால்வீசி போலமிட் டேயவன்
        கதறிப் பதைக்க வீட்டிக்
கணக்கிலவ னெழுதாத வண்ணமுங் காட்டிமேற்
        காதல்கூ ரிளமுனிக்குக்
தூலவுட லோடுமென் றொன்றுமவர் வாழவருள்
        தூயனை யெனையா ளுவார்
அங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
        சோமசுந் தரக்க டவுளே (௮)

வேதநான் கையுமரன் றரநான் விரித்தனென்
        வெள்விடை விற்கு முரியேன்
மேதினியு முயிர்களு மென்படைப் பாகுமனை
        வித்தைகளு சக்தி யாவாள்
ஆதலால் நான்பெரிய னென்றயன் சொல்லவரி
        யாக்கினை யென்ன வுயிர்க
ளழியாது காப்பதென் றொழிலாகு மென்மனைவி
        யவர்வாம் வலிக்கு மகளாம்
ஈதினல் நான்பெரிய னென்னவவ் விருவரும்
        மெழிலன்ன மேன மாகி
இயன்முடியு மடியையுந் தேடியுங் காணமை
        லெய்த்தயர்ந் திருக்க நீண்ட

சோதியாய் நின்றுநாம் பெரியமென் றவர்களின்
றுன்னிய வகந்தை போக்குந்
துங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே (௬)

முத்தனே முத்திபெறு வோர்தமக் கத்தனே
முதல்வனே முதலு மற்ற
முடிவுமில் லாததோர் மூலனே மூலனு
முத்தொழி லியற்ற முன்னி
வித்தகஞ் சேர்படைப் பாதிவினை மேவுவான்
விரிஞ்சன் முத லாய பேரை
விதியினு லேவுவித் தவைகமல மாதித்த
வெயிலின்முன் விரிவ தொக்கச்
சித்தம்வைத் தருளியது மல்லாமல் மற்றவர்
செருக்கினுல் வரம்பு மீறித்
தெய்வமுறை கோடாது சைவநெறி வீடாது
சீலமொடு நிற்க வருள்வாய்
சுத்தனே சுத்திதரு சத்தனே நித்தனே
துய்யனே யெனையா ளுவாய்
துங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே (௰)

அன்பரெல் லோருநினை யன்பினுன் மனமுருகி
யரியபொருள் பலவ டங்க
வானந்த மானபல பாடல்கள் பாடினூர்
அத்திற னிலாத யானுஞ்

இன்பவடி வானநின் றிருவடிப் பொருளையே
யேத்துமிப் பதிக மதனை
இகழாது கேட்போர் படிப்போர்கள் யாவரும்
இம்மையிற் போகமெல்லாம்
மண்புதல்வ ரொடுமேவி வாழவுஞ் சைவமாம்
மாதவந் தழைத்தோங் கவும்
மாசற்ற பேரின்ப முத்தியுங் கைகூடி
மருவுசிவ னடிய ராகித்
துன்பமணு காமலே செய்தருளும் வணிகர்குல
தூயநற் குலதெய் வமே
துங்கமுயர் கல்விநக ரங்கயற் கண்ணியமர்
சோமசுந் தரக்க டவுளே (யக)

முற்றிற்று

உ

சிவமயம்

ஸ்ரீ சௌந்தர நாயகி பதிகம்

பொங்குநீ ராடைசூழ் வையகந் தன்னிலே
புகழ் தருங்காட் சியாகிப்
புண்ணியக் கோலமுடன் விண்ணவர்கள்போற் றுநற்
புனித வாலய மமர்ந்து
மங்குத லிலாதவரு ளிங்கிதப் பெண்டெய்வ
மாகியே மன்ற ஞால
மக்களுக் குறுதுயர்கள் வாராத படியிங்கு
வந்தகா ருண்ய சிவனார்
பங்கமர் பராபரீ பத்தர்கிரு பாகரீ
பாரிலுனை யண்டி னோர்பாற்
பட்சம்வைத் தினிதளீஇப் பவக்கடல் தொலைத்தருட்
பார்வைகொள் ளம்மை நீயே
சங்கரி சயம்புவீ சற்குணீ நீர்க்குணீ
தமியேனை யாண்ட ருளுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
சௌந்தரநா யகியம்மையே. (க)

சுந்தரி சௌந்தரி துரந்தரி நிரந்தரி
சோதிமய மான கௌரி
சுமங்கலி பராந்தகி திரிசூலி யோங்காரி
சுதந்தரி விமல குமரி
மந்திர சடாதரி மாதங்கி ரீங்காரி
மகேசுரி வாம தேவி
மகமாயி வாமியெம் மாகாளி வைரவி
மதுரை மீனாட்சி தேவி
சந்த்ரசே கரிவிமலை சர்வகா ரணியமலை
சதாநந்த யோக ரூபி
சத்திகிரி புரைசூலி சர்வவல்லமை நீலி
சகலபூ ஷண நாயகி
தந்த்ரவா கமரூபி சத்யநித் யாநந்தி
தமியேனை யாண்ட ருளுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
சௌந்தரநா யகியம் மையே. (௨)

அன்னைசிவ காமிகா மாட்சிநீ லாட்சியுமை
அழகியவி சாலாட் சியே
அனைவருந் துதிசெய்ய நித்யகல் யாணியே
அகிலாண்ட நாய கியே
பொன்னினல் வடிவுடைய மங்கையர்க் கரசியே
புகலரிய மரகத வல்லி
புராதனி சராசரம் யாவையும் நினதருட்
போக்கிலே போக விட்டு

பன்னரிய வாநந்த பரபோக வாரிதி
படிந்தின்ப மெய்து விப்பாய்
பகரினிய கன்னல் மொழி மாதராய் காந்திமதி
பசியநற் கோல ரூபி
தன்னிகரி லாதநீ தண்கருணை பொழியுநீ
தமியேனை யாண்ட ருளுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபொறு செல்வமருள்
சௌந்தர நாயகியம் மையே (௫)

தக்கனர னைத்தவம் மேவிய வரத்தினுற்
றன்னறுங் காளிந் தியில்
சங்கின்வடி வாகநீ சார்தரக் கண்டவன்
றன்கரத் தாலெ டுக்க
மிக்கொரு குழவியாய்க் காணவே மன்னிடம்
மிகமகிழ வேகொ டுத்து
வெகுசிறப் புடன்வளர்த் தைந்தாண்டு வயதினில்
விமலனை நாடி நிற்க
அக்கடவுள் வந்துனை மாலையிட் டக்கணம்
அன்பினொ டாங்கி னீங்கி
ஆருமறி யாமலே வாமபா கத்திலே
யமர்ந்திகை லாய மேவிக்
தக்கதோ ரின்பவடி வானதாக் காமினீ
சான்றநின் னருள்பு ரிகுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
சௌந்தரநா யகியம் மையே (௬)

மேருவிற் கரசன் றவத்திற் கிரங்கிநீ
வெறிமலர்த் தடாக மதனில்
விரைநறுங் கமலமிசை விழைவுதரு குழவியாய்
விளங்கவே பரிவி னேந்திச்
சீருடன் மேனைமனை யாளிடந் தந்தவர்
தெவிட்டாத கனிபோ லவே
தினமுமொரு மேனியாய் நின்றனை வளர்க்கநீ
செல்லுமைந் தாண்டி னளவின்
ஏருலவு கோலமுறு மன்னையெம் மண்ணல்பா
லிச்சையால் தவமி யற்றி
யிறைவரை மணந்துபார் வதியென்னு நாமமோ
டெய்தின்ப மருவு செல்வி
தாருகனை வெற்றிகொள் சண்முகச் சேயைபோற்
றமியேனை யாண்ட ருளுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
சௌந்தரநா யகியம் மையே. (ரு)

அன்பா யுனக்கரன் வேதமொழி பகரநீ
யாதரமி லாது கேட்க
வதுபொறு துன்கணவர் வலைஞர் மகளாக
வாணையிற் சபிக்க வம்மா
இன்பாய வடிவுகொள் திருமேனி யொடுமேவி
யிருங்கட லுடித்த பாரி
எழில்கொள் தண் டுறைபாக்க வலைஞருக் கிறைவனுக்
கின்புதல்வி யாக நேர்ந்தே

என்புருகுழை யின்பமொடு பரதவன் வளர்க்கவெம்
மிறைவன்முன் சொன்ன படியே
இயனந்தி சாபந்தொலைந் திடவும் வலைவீசி
யெம்மன் னைநினை மணந்தே
தன்பெருமை யுணராத சங்கரன் றேவியே
தமியேனை யாண்ட ருளுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
சௌந்தரநா யகியம் மையே. (௬)

சீரணிகொள் மதுரைமலை யத்துவச பாண்டியன்
செய்தமக யாக மதனிற்
செகமெலா மீன்றவரு ளன்னைநீ பல்பணிகள்
திகழவும் மூன்று முலையும்
ஏரணிகொள் பாதச் சிலம்புமிள நகையுடன்
னிசைக்கினிய மழலை மொழியும்
யாவரும் முய்யவே கொண்டுமூ வயதாக
வேந்திழைபொன் மாலை மடியிற்
பேரணிகொள் விளையாடல் செய்தடா தகையெனப்
பேசுபெண் பிள்ளை யாகிப்
பேரரசர் தமைவென்று திக்குவிச யஞ்செய்து
பிஞ்ஞகன் றனைம ணந்து
தாரணிகொள் முடிசூடி மதுரையருள் மீனாட்சி
தமியேனை யாண்ட ருளுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
சௌந்தரநா யகியம் மையே. (௭)

வரமுனிவன் மதியா திருந்தமையின் வருமுனிவர்
　　வலிபதோர் சாப மீப
மகிடமுக வசுரனுப் வல்லரசு செயுநாளில்
　　வாமபா கத்தி யுன்னை
அரனெழிந தரியயன் முதலாய தேவர்கள்
　　அவன்செயுங் கொடுமை கூறி
அன்னைநின் முன்வந்து குறையிரந் தவர்வேண்ட
　　வதற்கிசைந் தமர்ந்த போரில்
சிரமெருமை யாவுடைய தீயனைச் சாய்த்தவன்
　　தெளிந்துநல் லொழுக்க மேவச்
செய்தமகி டாசுர மர்த்தனீ சிறுதெய்வ
　　தேவியே யாவ ரானும்
தரமுணர்ந் தவரவர்க் கருணல்கு சங்கரீ
　　தமியேனை யாண்ட ருளுவாய்
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
　　சௌந்தரா யகியம் மையே. (அ)

வெள்ளமாய்த் தேடுபொருள் யாவையும் வெவ்வினை
　　வெகுபாவ நிதியா குமே [யின்
வீணருற வும்பெற்று நானென்னு மாணவம்
　　மேலிடச் செய்து விடுமே
பள்ளமே டிதுவென்று பாராது பலவகைப்
　　பற்றெலாம் பற்று விக்கும்
பார்க்கிலது நிலையா யிருக்குமோ வதுவுமிலை
　　பத்தியொன் றேநி லைக்கும்

உள்ளமதை யீந்துநின தருணிதியை யுண்டுசெயு
முண்மையுணர் வையு மளிக்கும்
உறுதுயர்கள் சேரவொட் டாதுமன் னுயிர்களுக்
குயர்நலம் முரிய தாக்குந்
தள்ளுத லிலாதவத் திருவடிக் கன்புதான்
தமியற்கு வேண்டு மம்மா
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறு செல்வமருள்
சௌந்தரநா யகியம் மையே. (௯)

எத்திசையு முன்றனைப் பத்திசெயு மன்பர்கள்
எண்ணிலாப் பேரி ருக்க
வேறுமறி யாதவிவ் வேழையே னெளியமொழி
யாலிறைஞ் சித்து திக்தேன்
பத்திமொழி யென்றதாற் குற்றமொழி தள்ளியான்
பாடுமிப் பதிகத் தையும்
படித்துரைத் திடுமவர் கேட்பவர் தமக்கெலாம்
பலநிதிப் பொருள்வா ழியாய்ச்
சித்திதரு நன்மக்கள் மற்றுமுள போகங்கள்
சேரவே யருள் புரிகுவாய்
திங்களணி சங்கரன் தேவியம் பிகையான
சிற்சத்தி பராசத் தியாய்ச்
சத்தியம் முடையவர் சார்பாக நிற்கின்ற
சாந்தகுண முடைய தாயே
தகைமைதரு கல்விநகர் வகைமைபெறுசெல்வமருள்
சௌந்தரநா யகியம் மையே. (௰)

உ

சிவமயம்.

குன்னல் மாகாளி அம்மை

பதிகம்.

நீலாய தாட்சிசுப மங்கள சௌந்தரீ
        நிரஞ்சனி தயாள வதநீ
நிக்ரகவ னுக்கிரகி நிரந்தரி சதாநந்தி
        நிருமலீ சேகரட் சகீ
சூலிகுண சாலிபரி பாலிக்ரு பாகரீ
        தூலசூக் குமகா ரணீ
சுத்தபரி பூரணீ நித்யகல் யாணிசுப
        சோபனங் கொண்ட வளநீ
பாலரச வடிவமாய்க் கார்நிரைகொள் குழலியாய்ப்
        பாலமதி வதன முடனே
பாங்குவிழி யுங்கருணை யகலாத களிமதுர
        பவளவா யும்மி லங்கிக்
கோலமுறு முன்னைக் கொண்டாடி மடியனேன்
        குழைபவரு வரங்க ளருள்வாய்
குவ்வுசெங் கமலங்கள் நிலவுதண் கல்விநகர்
        குன்னல்மா காளி யுமையே. (௧)

ஆறுசாத் திரநான்கு வேதமோ டாறுபத்து
நான்குகலை ஞானங் களாய்
அஞ்செழுத் ததனிலே யோரெழுத் துருவமா
யமர்ந்து டிருந்த வளுநீ
சிறிவரு மாணவப் பேரிருள் சிதைத்தருட்
டிருநீ றளிப்பவளுநீ
சிவாகம புராணமிதி காசமுத லானவும்
தேடுதற் கரிய வளுநீ
பேறுதரு நினதடியை வீறுபெற வெளியெனேன்
பின்பற்ற வைப்ப வளுநீ
பேதமுறு முட்பகை விலக்கினர் தமக்கெலாம்
பேரின்ப மருள்ப வளுநீ
கூறுபடு வினையெலா மாறுபட வென்மனம்
குழையநின் னருள் புரிகுவாய்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
குன்னல் மாகாளி யுமையே. (உ)

எங்குமா யங்குமா யிங்குமா யென்றுமா
யின்றுமா யாண்டு மாகி
இருநான்கோ டொருகோளு மொருவாதவிருவினையு
மிகபர சுகங்க ளாயும்
தங்குமாச் சிரமநா லாகிதொண் ணூற்றாறு
தத்துவந் தாமு மாகித்
தாவிலா முப்பத்தி ரண்டுதரு மங்களுந்
தழையவே செய்ப வளுநீ

இங்குலவு மக்களின் னிருவினைக் கிடாக
    வியல்சரண தருபோ தமும்
ஈந்தருளி நின்றனை நின்றவுனை யெண்ணும
    லேமாந்து நிற்ற னன்றே
கொங்கலர் நறுங்குழற் கோதையுனை யம்மையே
    கோதொழித் தென்னை யாள்வாய்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
    குன்னல் மாகாளி யுமையே. (௩)

நிலையிலா வாழ்வினை நிலையென்று நம்பியான்
    நின்னருளை நாடி யறியேன்
நித்தநின் கோயிலை வலமாக வந்துவல்
    வினைகளை நீக்க வறியேன்
கலையுணர்ந் தோரிடம் நினதுசெயல் யாவையுங்
    கற்றுநான் புகழ வறியேன்
கன்ம வினையா லிந்த தேகம தெடுத்துநான்
    கண்டபல னென்று மறியேன்
மலையாக வென்னுடல் வருத்துபல நோய்களை
    மாற்றிவெவ் வகையு மறியேன்
மறலிவலை வீசியுயிர் கவரவரு நாளினில்
    மதிமயக் காம லருள்வாய்
குலதெய்வ மாயுன்னை யம்மைநா னுரிமையிற்
    கொண்டுதுதி செய்து நின்றேன்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
    குன்னல்மா காளி யுமையே. (௪)

நீதமது வாயுனைப் போற்றுமடி யவருக்கு
நேயபய னைவையு மருள்வாய்
நீதக்கன் மகளாகி மலையரசன் மகளாகி
நிகரிலா மீனவன்றன்
காதலுறு மகளாகி போதமில் மறவர்தங்
காமர்நன் மகளு மாகிக்
காசினியி லன்னவர்க் குபர்போக வுறுதிதரு
கன்னியுனை யுலக றியுமே
சாதனந் தேடியுன தருளைநா னெய்துவகை
சற்றுகி லும்மறி கிலேனே
சங்கடங் களிலாழ மெளியனே னுய்யும்வகை
சாதகஞ் செய்ய வருவாய்
கோதண்ட பாணிதன் றங்கையே குவலயங்
கொண்டாடு பெண்டெய் வமே
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
குன்னல் மாகாளி யுமையே. (ரு)

தாயது வயிற்றினி லீரைந்து மாதமாய்த்
தயங்கிக் கிடைந்து ழன்றே
தரணிதனி லேபிறந் தறிவது மயங்கியே
தாய்தந்தை தமர்க ளென்ன
நேயமுற மூவாசை மேலிட நிரந்தரம்
நேர்ந்தபா சத்த முந்தி
நினைவுதடு மாறிவரு மிப்பிறவி வீணாக
நின்னைத் துதிக்க வறியேன்.

சேயதைப் பிழைசெய்த தென்றுதாய் சீறுவது
செகதலத் துண்டோ சொலாய்
தில்லைவன நாதனெதிர் நடனமிடு செல்வியாய்த்
தில்லைவட பாலெல் லையிற்
கோயில்கொண் டருளம்மை யெளியேனை யைம்புலக்
கொடியரை மறுத்த ருளுவாய்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
குன்னல்மா காளி யுமையே. (சு)

ஐயோ பிருங்கிருடி யுன்றனை விலக்கியுன
தரனடி வழுத்தி நிற்ப
வதுபொறு தெனதுடைமை யாகுநின் றசைகுருதி
யவையொழித் திடுக வென்ன
மெய்யாகு மவையுதறி யரனிடங் கோலொன் று
வேண்டவ னளித்தல் கண்டு
வெகுண்டுசிவ னைப்பிரிந் தேகிநீ வான்மீகி
மேவிடம் புகுந்து லாவப்
பொய்யாத புற்றிடங் கொண்டமுனி கண்டுநனி
புகல்மந் திரத்தி னெய்திப்
புலவிபோய் நின்கணவர் தம்முடன் புந்திமகிழ்
பொருவில்பங் குடையை யானுய்
கொய்யாத மலர்கொண்டு நின்னையே சரணென்று
கூறுமடி யேற்க ருளுவாய்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
குன்னல்மா காளி யுமையே. (எ)

முற்பிறப் புக்களில் லென்னபா வங்களை
முனைந்துநான் றேடி னேனே
மூத்தவர்சொல் வார்த்தைகளை மாற்றிமனமேற்றபடி
மூர்க்கமா யொழுகி னேனே
கற்புநிறை யில்லாத பேதைய ருடன்கூடி
காலமவ மாக்கி னேனே
கண்டபல போகங்க ளிச்சைமேற் கொண்டுநாள்
கழியவே நின்றே னேனே
பற்பகற் றேடுபொரு ளியாவையும் நல்வழி
பரப்பா திருத்தி னேனே
பலசுவைகொள் போனகம் பிறர்பசித் திருக்கவே
பாழ்வயிற் றடக்கி னேனே
கொற்பயிலு மிக்குறைக ளியாவையும் போக்கியருள்
கூடுகைக் கெனையாக் குவாய்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
குன்னல்மா காளி யுமையே. (அ)

பெற்றதா யென்றுன்னை நித்தலும் வேண்டினேன்
பேரருள் வழங்கல் வேண்டும்
பெரியநா யகியம்மை பிள்ளையைப் பெற்றதாய்
பேணுதல் மனுவ ழக்கே
மற்றவர் ளைப்போல வல்லைநீ மாறுத
மன்னுபி ரவைக்கு மன்னை
மறவாத வுரிமையொடு மிறவாத பேரின்ப
வாழ்வை நான் மருவி நின்றேன்

கற்றவர்க ணேசமே நற்றவர்கள் பாசமே
கருதரிய கன்னியமுதே
காமனை யெரித்தவன் றேவியே யடியவர்
கருத்திற் கிசைந்த கனியே
கொற்றமுறு காலனுயிர் கொடுமைபுரி யாவகை
கொண்டெனைக் காத்த ருளுவாய்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
குன்னல்மா காளி யுமையே. (கூ)

பாவினந் தேர்ந்துணைப் பாடுபுல வோர்பலர்
பாரினி லிருக்க வன்னர்
பான்மைசிறி தேனுமில் லாதவிவ் வேழையேன்
பத்திமொழி யாற்று திப்பேன்
கேவலமெ தென்றதைத் தள்ளாது மென்மைசேர்
கிள்ளைமொழி யாயு வந்தே
கிளர்ச்சிபெற வென்பாடல் பத்தையுஞ் சலியாது
கேட்பவர் படிப்ப வரெலாம்
மேவுசீர் நன்மக்கள் நன்னிதிப் பொருளெலாம்
மென்மேலு மெய்த வாங்கே
வினைகளைப் போக்கிநின் கஞ்சமல ரடிநிழல்
வீற்றிருக் கச்செய் குவாய்
கோவிடப மேறுமொரு மாவலவ னுள்ளமது
கோயிலாக் கொண்டரு ளுவாய்
குலவுசெங் கமலமகள் நிலவுதண் கல்விநகர்
குன்னல்மா காளி யுமையே. (ய)

உ

ஸ்ரீராமஜெயம்

ஸ்ரீரங்கநாதர் பதிகம்

ஆதியா மரிகிருஷ்ணன் ஆழிசேர் கடல்வண்ணன்
அநந்தசய னன்னா ரணன்
அரவணைச் செல்வனடி யோன்கரிய னச்சுத
னாருட் டிருவ ரங்கன்
மாதவன் கோவிந்தன் மலர்மங்கை நாயகன்
மாயவன் மால் முகுந்தன்
வனமா லிராகவன் வாசுதே வன்விண்டு
வல்வன்வை குந்த நாதன்
பீதாம்ப ரன்கருட கேதனன் கேசவன்
பிறப்பிலான் கொண்டல் வண்ணன்
பின்னைகேள் வன்சவுரி பூமிகேள் வன்பச்சைப்
பெருமைகொள் சக்ரபாணி
சீதரன் சாரங்க பாணியாய்ச் செகமெலாம்
சேவிக்க நின்றரு ளுவாய்
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமர்
ஸ்ரீரங்க நாத முகிலே. (க)

முன்னமந் தரமதனி லண்டங்க ளொருகோடி
முட்டைபோ லச்சு ழலநீ
மூரிநீ ரதனிலோ ராலிலையின் மிசைதுயின்
மூண்டுகண் வளர்ந்தி ருக்கச்
சொன்னமய மாயனின் னுந்தியங் கமலமிசை
சுருதிநா யகன்பி றந்து
துன்னுபல வுயிரையும் உபபிரமர் பலரையும்
துவாதசா தித்தர் தமையும்
மன்னுமச் சத்தரிஷி தம்மையும் சனகாதி
மருத்துவர் வசுக்கள் தேவர்
மருவுமிந் திரனாதி தேவர்கள் பலரையும்
மரபினாற் றோற்று விக்கச்
சின்னமொடு காவல்புரி யண்ணலே தீமைதீர்
தெய்வமே பெணெயா ளுவாய்
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமர்
சீரங்க நாத முகிலே. (உ)

காதிலே மதுகைட வசுரர்தாந் தோன்றியே
காணரிய வேத மெல்லாங்
கவர்ந்தோட வவருயிர் கவர்ந்துவா னவர்வேண்டக்
காசினியெ லாம்ப டைத்து
வேதமொழி மீளவும் நான்முகற் கருள்புரியு
மேதக்க தெய்வ நிதியே
வேண்டுவார் வேண்டுவதை யீயும் பெருங்கருணை
விண்ணவர் தமக்கு மேலோய்

ஆதிகடு வந்தங்க ளில்லாத பரையெனும்
அருட்சத்தி யான தேவா
அகிலாண்ட நாயகா மகிபாலன் முதலான
வண்டரெல் லோர்க்கு மரசே
தீதிலா தொருமாது தோளிலே யமரவுஞ்
சிறப்புடைய மார்ப மதனிற்
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமர்
சீரங்க நாத முகிலே. (௩)

உபநிடத மேமுகம் மிருசுடர்க ளேகண்கள்
உரிய மறையே கால்கள்
ஒருவாத வேள்வியே வாயதனின் னூன்றுமவ்
வுபமா மேபற் களாம்
சுபமுடைய மந்திரம் உயர்மருப் பாகவே
சொல்லுமிவ் வுலகை யேந்தித்
தொன்மைபெற நிலைநிறுவி மன்னுயிர்க ளெருளுச்
சோதிவடி வான தூய
இபமான வேனவுரு வாகுமெம் மண்ணலே
இராகவா ரகு லத்தெம்
மேந்தலே நின்செயல்கள் யாவையும் பார்க்கிலேசா
இன்பமே யாகும் நின்னைச்
செபமுடைய வடியரே சிந்திப்ப ரச்சிந்தை
சிறியெனேற் கருள்புரிகுவாய்
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமர்
சீரங்க நாத முகிலே. (௪)

இரணியன் றிசைமுக னிடம்பெறு வரத்தினு
	லிமையவர் முனிவர் யார்க்கும்
எண்ணிலாத் துன்பங்கள் பலசெய்து வருநாளி
	லேங்கியவர் நின்னை வந்து
முரணுமச் செயல்கூறி முறையிடவு மாகுநாள்
	முனிந்துதாழ்ந் திருக்க வன்றான்
முறைதவறி யாவருந் தன்னைவணங் குமபடி
	மொழிய வ்வன் மகன்கேட் டிலன்
தானுடைய வப்பிரக லாதனை யவன்றொழும்
	சாமியெங்குள னென்றலும்
சருவவியா பகனவன் தூணிலு மிருப்பனெனத்
	தாளாது தூணி லறையத்
திரனுடன் நரசிம்ம மாகவெளி வந்தவனைச்
	சேதித்த தெய்வவரியே
திருமருவு கங்கிகர் வரமருவு சேடனமர்
	சீரங்க நாத முகிலே. (ரு)

மாவலியென் றொருவசுரன் முன்னுளில் வலிமிஞ்சி
	வானவர்கள் முதலினோரை
மனமடிய வாழும் படிக்கரசு செய்யவவர்
	வாடிமுறை யிடுதல் நேர்ந்து
காவல்புரி கொள்கையிற் காசிபர்க் கதிதியாற்
	காதலாற் றோன்றி நீதான்
கரியகுறள் வடிவெடுத் தவனுடன் மூன்றடிக்
	காலின்மண் ணளந்து வேண்ட

ஆவலொடு மவனதற் கிசைதலு மண்ணல்நீ
ஆகாய நிலமி வற்றின்
அரியவிரு திருவடிகள் வைத்ததும் போதாம
லவன்றலையி னோர டிதனைத்
தேவர்மகிழ் காணவைத் தழுத்திச் சிதைத்தவுன்
றிறமைதான் செப்ப வெளிதோ
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமர்
சீரங்க நாத முகிலே. (௬)

அத்திரியின் மகனாகி கார்த்தவீ ரியனாகு
மருச்சுனனை யாத ரித்தாய்
அன்றுசம தக்கினியின் மகனாகிப் பரசுராம
மன்னெனப் பேர்த ரித்தும்
பத்திமிகு நின்றாதை கார்த்த னுக்கோர்பகல்
பரிவினால் விருந்து செய்யப்
பார்த்தவப் புதல்வரப் பசுவின் பொருட்டுநிற்
பயந்ததா தையைக்கொல் லவே
சுத்தநீ யதுபொரு தரசகுலம் வேரறத்
தோண்டிக் களைதெ றிந்தாய்
சொல்லுமிக் கொடியபழி யஞ்சுகா சிபர்வேண்டத்
தொல்லுல கவர்க்க ளித்தே
சித்தமிசை யருள்கொண்டு திரைகடன்மேவிச்
சிரஞ்சீவியாக நின்ற
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமர்
சீரங்க நாத முகிலே. (௭)

தசரதன் றனக்குமக னாகிச் ராமனென்
சாற்றுதிரு நாம முடனே
சானகியை நன்மணஞ் செய்திளைய தம்பியொடு
தவமுனிவர் துயர மறவே
நிசமான பஞ்சவடி தலைமேவ ராவணன்
நிலமுடன் சீதை தன்னை
நீதிநெறி யல்லாத நெறிதனிற் கொடுபோகி
நீக்கறையில் வைக்க நீதான்
வசையிலா வானரச் சேனையி னரக்கர் குல
மாள்வித்து வீட்டணற்கு
வளமான லங்கையை முடிதந்து வானூறு
மானமீ தேறி மகிழ்வாய்த்
திசைபுகழ யோத்தியைச் சேர்ந்துலக முய்யவமர்
சிம்மாச னாதி பதியே
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமர்
சீரங்க நாத முகிலே. (அ)

பாவமிக மேலிடப் பூமகட் காகபூ
பாரமது தாங்கு தற்கே
பார்தனில் வசுதேவ ருக்குப் பிறந்துசிசு
பாலன்முத லான தீயக்
காவல்புரி மன்னர்பலர் தம்மையுங் கொன்று நீ
காதல்விளை யாடல் செய்தும்
காலிங்க நிர்த்தன முதலாய பலலீலை
கண்டுமடி யார்க் குதவியும்

தாவிலாப் பஞ்சவர்க் குறுதுணைவ ளுகியே
சண்டாள துரியோ தனன்
சண்டையிற் றுணைவரொடு மாளவே பாண்டவர்
சகாயனுய்ச் சமைந்து நின்ற
தேவனே தேவகிதன் மைந்தனே துவரைவளர்
தெய்வமே யெனையா ளுவாய்
திருமருவு கல்விநகர் வரமருவு சேடன்மா
சீரங்க நாத முகிலே. (௯)

கோடானு கோடிபேர் கொண்டாடு முன்றனைக்
குலாவுமென தாவ லாலே
கூசாது பாடினே னொருபதிக மதனைநீ
குதலைமொழி யாயு வந்து
நாடமா னுடுநின் னடியார்க ளெல்லோரு
நாடநீ யருள்புரிகுவாய்
நண்ணிப் படிக்குமவர் கேட்பவர்கள் யாவரும்
நன்மைகளெலாமெய் தியுங்
கூடாத பொருளெலாங் கூடிவர நன்மக்கள்
கூடவுஞ் செய்து வைப்பாய்
கொண்டையாள னேகருட வாகன கோவலர்கள்
கொண்டாடு குலதெய் வமே
தேடாத செல்வமே வாடாத தெய்வமே
சிற்றுயிர்க் குற்ற துணையே
திருமருவு கல்விநகர் வரமருவு சேடனமா
சீரங்க நாத முகிலே. (௰)

முற்றிற்று.

உ

சிவமயம்.

அகவற்பா

அருமறைக் கெட்டா வமல மூர்த்தியாய்
அருவு முருவு மருவுரு வுமுமாய்ப்
பல்லுயிர் தமக்கும் பரமகா ரணமாய்
எல்லையி லின்பத் தீறிலா முதலாய்க்
கைலையங் கிரியிற் கருணைவா ரிதியாய்ப்
பயிலருந் தவத்துப் பான்முனை யாகிப்
பத்தரைக் காக்கும் பரமெனத் தோன்றி
எத்திசை மருங்கினும் இயல்புற வமர்ந்து
புவிதனில் மேவப் புந்தியிற் கொண்டு
சிவலிங் காதி மூர்த்திக ளிடமாய்
அம்மை யப்பனுய் யாவரும் போற்ற
மெய்ம்மைசேர் நலங்கள் திகழ்தரு பதிகளில்
விமலன் விமலியாய் வீற்றிருந் தருளுந்
தென்பான் மேவிய திருநட மணியே,
தென்பாண்டி நாடு சீருட னிலங்கக்
காளையார் கோயிலுங் கண்ட தேவியுந்
திருக்கோட்டி யூருந் திருப்புத் தூருங்
கோவி லூருங் குன்றக் குடியும்
எனுமிவ் வூர்கட் கிடைநிலத் தாகிக்

காளிபுர மான்மியங் கண்ட வாறே
மணிமுத் தாநதி மருவிய கழனிசூழ்
கல்ல லென்னுங் கல்விமா நகரிற்
சோம சுந்தரர் சௌந்தர நாயகி
நாமந் தாங்கிய நலந்திகழ் வடிவமும்
வெந்துயர் போக்குஞ் சந்திரபுட் கரணியுங்
கந்தக் கடவுளுங் கணபதி மூர்த்தியும்
ஏனைக் கணங்களும் இயல்புற விளங்க
மோனந் தலைப்படு ஞானவா ரிதியாம்
வேதாந்த ஞான வெள்ளையப் பையா
தீதுதீர் சிவகங் கைநகர் மன்ன
ரனுமதி பெற்றே யமைந்த வாலயஞ்
சிறிதா யிருந்ததைப் பெரிதா யமைத்தே
அறம்புரி கொள்கைத் திறம்புரி வணிகர்
கலியத்த மையா யிரத்துப் பதினேழ்
நளமகா வருடம் மகரமு வேழிற்
பூர்வ பக்கமே காதசி திதியின்
ஏர்வளர் மிருகசீ ரிடமீன லக்கினங்
கும்பாபி டேகங் குறைவறச் செய்ப
நம்புமடி யாருளம் நயக்க நலந்திகழ்
பெரிய கோயி லெனத்திகழ்ந் துய்ய
அரிய மாதவர் உவந்துளஞ் சிறக்கச்
சற்சன ராகிய சாதுக்கள் மடமும்
பாட சாலையும் பசித்தவர்த் தாங்கும்
அன்னசத் திரமும் அந்தண ரிருக்கையும்
மன்னிய பசுமடம் சாவடி மருளில்

அறுபத்து மூவர் மடமும் அரவணை
யுறுமுகில் வண்ணன் ஒருபெருங் கோயிலும்
குன்னல்மா காளி கோயிலு மருகுறப்
பன்னுநால் வேதபா ராயண முழங்க
மக்களெல் லோரும் நாளும் வழிபடத்
திக்கெட்டுந் தேரடிக் கறுப்பன் காக்க
மாசி மகந்தனில் மன்னுயிர்க் கருளுவான்
ஆசி றிருவிழா வணைந்தருட் கோலம்
பத்தருக் கெல்லாம் பயன்றரு பான்மைபோல்
தன்முடி தாழ்த்துப் பொன்னடி முடித்துப்
பாடித் துதிக்கும் பாவலன் கல்லல்
மாற்றூர்க் கோயில் வகுப்பிற் கருப்பூர்க்
கறுப்பன் செட்டி கழறிய சிறுமொழி
யன்பு மிகுதியா லாக்கிய தாலே
புன்மொழி யாயினும் புந்தியுட் கொண்டு
கல்வியுஞ் செல்வமுங் கவின்செய் தருளும்
அருட்பெருங் கடலே யாரா வமுதே
யருட்பெரு முலக வாழ்வினை மதிடாத்
தூயவர் தம்மைச் சேயெனத் தாங்கும்
யாயே யீச யமனுதைத் தவனே
கங்கா தரனே கண்ணுதற் பொருளே
மங்கை பாகனே மான்மழு வேந்தி
நித்தனே யத்தனே நிமலனே யமலனே
சுத்தனே சுயம்பிர காசத் துருவனே
இலதா யுளதா யிலதுள ததுவாய்
நலமிகு வுலக மெல்லாந் தானாய்ப்

னின்றருள் புரியும் வென்றிசேர் விடையாய்
வென்றிசேர் தத்துவம் சைவசித் தாந்தம்
விழுமிய பொருளண புராணம் பலவும்
சிவனே கணவ னவன்புனை கீறும்
கழுத்திடு மக்கழு மவன்புனை தாலியாம்
வீட்டு நெறியா மவனைந் தெழுத்தும்
எனவுண ராதே கீழ்மை கொளுந்தக்
கொண்டு கொண்டது விடாத கொடிறும்
பேதையும் போல நாத்திகம் பேசுஞ்
சிறியர்க் குறுநெறி யுணர்த்துந் தேசிக
என்றுநின் றுணைத்தாள் மறவா தேத்திப்
பாகதி பெறுவான் றிருமுன்பெய்த
உரிமையி னெய்தின னுவந்தெனை யேந்தும்
எந்தாய் போற்றி யிறைவா போற்றி
முத்தி நாதனே மூவா முதல்வனே
எத்திறத் தானும் எய்தரும் பொருளே
தேவ வேதநற் சிந்தனை தன்னுள்
யாவரும் போற்றும் ஈறிலா வொருவ
எவ்வெவர் எவ்வெத் தெய்வங் கொளினும்
அவ்வத் தெய்வ மாகி நின்றே
அவரவர் பக்குவ முணர்ந்தருள் புரியும்
தவப்பெருங் குன்றே தன்னே ரில்லா
ஒருவ னென்ன வுலக மெத்துந்
திருவ னென்னுந் தேசார் ஞானச்
செல்வ நின்னைச் சேரும் அடியார்
அவக்குறை நீக்கி அல்ல லகற்றிப்

பவக்குறை முடிக்கும் பரம காருணிய
உண்டென் பாரையும் இல்லையென் பாரையும்
உண்டில்லை என்பார் தம்மையும் என்று
ஒன்றென் பாரையும் இரண்டென் பாரையும்
ஒன்றிரண் டென்பார் தம்மையு மென்று
நன்றென் பாரையுந் தீதென் பாரையும்
நன்று தீதென வன்றென் பாரையும்
அற்புதம் அதிசயம் என்பார் குழுவையும்
கற்பிதம் யாவையுங் கண்டதே காட்சி
யானே கடவுள் என்பார் திரளையும்
தேனார் மொழிமட வார்களே தெய்வம்
அவர் முயக்கதுவே அரிய திருப்பணி
அவர்பா லனுபவம் அழியா வின்பம்
என்பார் பலரையும் எரியே புனலே
மண்ணே வளியே விசும்பே இவைதாம்
உண்ணின் றியக்க வியங்கி னல்லது
இயங்காப் பொருளவை யாவையும் முதலெனக்
கூறுவார் தம்மையுங் கூறு கூறாக
வேறு வேறு விளப்புவா ரேனை
எல்லோ ரையும் இசைந்தரு ளமைந்து
தாடலை வைக்கு மாடலெம் பெரும
நின்னைத் தலைவ னயுளங் கொளீஇ
என்னைநின் றொழும்புக் குரிய னாக்கினோன்
முந்தை முழுமுத னின்புகழ்
போற்றி போற்றி புண்ணிய போற்றியே.

முற்றிற்று.

Cndg

15 12 70

ஜி. வி. & சன்ஸ்

பண்டைமகளிர்:—

1. நளாயினி கதை
2. சாவித்ரி கதை
3. சகுந்தலை கதை
4. தமயந்தி கதை

ஐம்பெருங்காப்பியநடை:—

1. விநாயகபுராணம்
2. கந்த புராணம்
3. இராமாயணம்
4. மகாபாரதம்
5. பாகவதம் பத்து

இந்நூல்களும் இவைபோல்வன பலவும் இனிய தமிழில், எளிய நடையில், சுருங்கிய நிலையில் அழகிய அச்சில், சிறிய விலையில், சிறுவர் சிறுமியர் முதல் யாவரும் சுவைபெறப் படித்து இன்புறுமாறு எழுதி அச்சிட்டு விற்பனை செய்யப்படும். வேண்டுவோர் அடியிற்கண்ட விலாசத்திற் பெற்றுக் கொள்ளலாம்.

ஜி. வி & சன்ஸ்

காரைக்குடி.